திரு. சா. கணேசன் : விமானம் மூலம் கிருமிநாசினிகளைத் தெளிக்கும்போது நல்ல பயிர்களிலும் அந்தக் கிருமிநாசினி விழுமாதலால் நல்ல பயிர்கள் பாழாகாதவாறு ஆவன செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அது நல்ல பயிர்களை ஒன்றும் சேதப் படுத்தாது. நல்ல பயிர்களுக்கும் சாதகமாகத்தான் இருக்கிறது.

அரசாங்க பஸ் சர்வீஸ்

* 524 கேள்வி.—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரியிலிருந்து சென்னைக்கும் பெங்களூருக்கும் (State Express Buses) அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்கள் விட உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம் : கிருஷ்ணகிரியில் ஆறு மணி அளவுக்கு ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் புறப்படுகிறது. தருமபுரியிலிருந்து 4 மணி அல்லது 5 மணிக்குப் புறப்படுகிற அளவுக்கு துரித பஸ் விட அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'உத்தேசம் இல்லை' என்று சொன்னேன்.

* 525 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether the Government have received a resolution from Madras City Bus Passengers Association requesting the Government to extend concessions to School and College-going students charging only 50 per cent of the fare; and

(*b*) if so, the action taken thereon ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A Memorandum has been received from the Bus Passengers Association, Madras suggesting among other things that students concessions and issue of half tickets may be considered.

(*b*) The suggestion is under consideration of the Government.

திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கெனவே விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்டிருக்கிற சென்னை நகர மக்கள் பஸ் கட்டண உயர்வினால் தாங்க முடியாது தவிக்கிறார்கள். ஆகவே, பஸ் கட்டண உயர்வை ரத்து செய்வது பற்றி அரசாங்கம் புனராலோசனை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விலைவாசி உயர்வு காரணமாகத்தான் பஸ் கட்டணத்தையும் உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. பெட்ரோல் விலை உயர்ந்து விட்டது; டீசல் விலை உயர்ந்து